2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

21—

துணை மின் நிலையம்

***108476—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வாலாந்தூர் கிராமத்தில் 110/11 கிலோ வோல்ட் திறனுள்ள துணை மின் நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வாலாந்தூர் கிராமத்தில் ஒரு 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் 11—வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கிறீர்களா? சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ரொம்ப நேரம் கொடுத்தேன், அவரிடமிருந்து கேள்வியே வரவில்லை.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், வாலாந்தூர் கிராமத்தில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம்

2011 ஜனவரி 12]

அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது ஏற்புடையதாக இருக்கிறது. எங்கள் உசிலம்பட்டி ஒன்றியம், இடையப்பட்டியிலும் இதேபோல 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. நிலமெல்லாம் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பகுதியிலே தயாரான நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கின்றவர்கள் விவசாயிகள், அவர்கள் அனைவரும் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றவர்கள். அங்கு வருகின்ற மும்முனை மின் இணைப்பில் வோல்டேஜ் குறைவாக வருவதால் இடையப்பட்டியிலும் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கினால், அந்தப் பகுதியிலுள்ள விவசாயப் பெருமக்கள் விவசாயம் செய்வதற்கு ஏதுவாக அமையும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடையப்பட்டி கிராமத்திற்கும் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், நிலம் தயாராக இருப்பதால் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அந்த நிலம் எங்கே இருக்கிறது, யாரிடத்திலே இருக்கிறது என்கின்ற விவரங்களையெல்லாம் எழுதிக் கொடுப்பாரேயானால் 2011 ஆம் ஆண்டு அந்தத் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு மின் வாரியம் முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

முற்பகல் 9–35

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மின்சாரத் துறை அதிகாரிகளால் இடம் தேர்வு செய்யப்பட்டு ஏற்கெனவே அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு உள்ளது. அரசிடம்தான் அது pending–ஆக உள்ளதாக, மதுரை மாவட்டத்திலே இருக்கின்ற Superintending Engineer அவர்கள் என்னிடத்திலே தெரிவித்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர்

[2011 ஜனவரி 12

அவர்கள் அதை உடனடியாகப் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கடந்த பத்தாம் தேதியன்று எங்கள் உசிலம்பட்டி கோட்டத்திலே உள்ள எழுமலை துணை மின் நிலையத்திலே மின் மாற்றி தீப்பிடித்து எரிந்துவிட்டதால் அந்தப் பகுதியிலே இப்போது மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. அந்தத் துணை மின் நிலையம் தீப்பிடித்து எரிந்த காரணத்தால் ஏறக்குறைய 30 கிராமங்கள் இருளில் மூழ்கியிருக்கின்றன. இதனால் அங்கிருக்கின்ற விவசாயிகள் இப்போது விவசாயம் செய்ய முடியாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது நெல் நடவு செய்து அது பரிச்சலிலே இருக்கின்ற காரணத்தால், இப்போது தண்ணீர் இல்லையென்று சொன்னால், விவசாயிகள், மிகவும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அரசு இதை உடனடியாகக் கண்டறிந்து போர்க்கால அடிப்படையில் அந்த எழுமலை துணை மின் நிலையத்தின் மின் மாற்றியை உடனடியாக மாற்றி, எழுமலை நகரம் உட்பட ஏறக்குறைய 30 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'நிலம் தயாராக இருக்கிறது; அரசு அதிகாரிகள் அதைப் பார்த்து மின் வாரியத்திற்கு முன்மொழிவைப் பரிந்துரை செய்திருக்கிறார்கள்' என்று முதலில் சொன்னார்கள். 2011 ஆம் ஆண்டில் நிச்சயமாக அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். துணை மின் நிலையத்தில் தீப்பற்றி எரிந்துவிட்ட மின் மாற்றி பற்றிச் சொன்னார்கள். அதனால் 30 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்கள். அதை உடனடியாகப் பழுதுபார்த்து, உரிய நடவடிக்கை எடுக்கும்படி இன்றைக்கே மின் வாரியத்திற்கு அறிவுரை வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு இடங்களிலே, transformer

2011 ஜனவரி 12]

capacity–ஐவிட கூடுதலாக மின் இணைப்புகள் தரப்படுகின்றன. 110 மெகாவாட் திறன் உள்ள transformer இருக்கின்ற பகுதிகளில், பல்வேறு இடங்களில் பார்க்கின்றபோது, கூடுதலான மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன. அப்படித் தரப்படுவதால் மின்னழுத்தக் குறைபாடு வருகின்ற காரணத்தால், மோட்டார்கள் பழுதடைகின்ற நிலை உருவாகிறது. இதையெல்லாம் மனதிலே கொண்டு தமிழகத்திலே எந்தெந்த இடங்களிலே கூடுதலாக மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அத்தனை இடங்களிலும், அதிகத் திறனுள்ள transformer–களாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் எவ்வளவு மின்சாரத்தைப் பயன்படுத்தப் போகிறோம் என்று எழுதிக் கொடுக்கிறார்களோ அதைப் பொறுத்து transformers பொருத்தப்படுகின்றன. சிலபேர் 5 Horse Power மின்சார மோட்டார் பொருத்துகிறோம் என்று சொல்லிவிட்டு, அவர்கள் 7.5 Horse Power மோட்டார் போட்டு பயன்படுத்துகிறார்கள். மின்சார வாரியத்திற்குத் தெரியாமலேயே, விவசாயிகள் இப்படி மோட்டார்களை மாற்றுகின்ற காரணத்தினாலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன. இருந்தாலும் எங்கெங்கே என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனவோ, அவற்றை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் அந்தப் பகுதிகளிலே புதிய transformers போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலும், தற்பொழுதும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், என்னுடைய தொகுதியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையோடு நாங்கள் கேட்ட அத்துணை இடங்களிலும் துணை மின் நிலையம் வழங்கி, அப்பகுதி மக்களுடைய மின் அழுத்தத் தாழ்வுநிலையைப் போக்கியுள்ளார்கள். அதற்கு என்னுடைய

[2011 ஜனவரி 12

மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். நாகை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மணக்குடி ஊராட்சியில் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ள 33/11 K.V. unmanned துணை மின் நிலையம் அமைக்கக் கேட்டு, நிலம் ஆய்வு செய்யப்பட்டு, வருவாய்த் துறைக்கு மின் துறை பணம் செலுத்தி, மின் துறைக்கு நிலம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, ஒப்படை செய்யப்பட்டுள்ளது. இதுவரை கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே நான் நேரிலே தெரிவித்திருக்கிறேன். கஞ்சாநகரம், உளுத்துக்குப்பை, கருவாழக்கரை, மேலப்பாதி, உப்புக்கடை உள்ளிட்ட 14 கிராம மக்கள் பயன்பெறும் வகையில், Low Voltage Package Area ஆக உள்ள மணக்குடியில் துணை மின் நிலையக் கட்டுமானப் பணிகள் உடனடியாகத் துவங்கப்படுமா? அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள், 2 தினங்களுக்கு முன்னாலே இதுபற்றி என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியத் தலைவரிடத்திலே பேசியிருக்கிறேன். 2011 ஆம் ஆண்டு அந்த Sub Station கட்டுவதற்கானப் பணிகளைத் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 9–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுக்காலத்திலே பல இடங்களிலே, துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தந்திருக்கிறார்கள். ஆனால், நாட்டில் பெருகி வருகின்ற தொழில் வளர்ச்சி காரணமாகவும், மின்சாரத்தினுடைய தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிற சூழ்நிலையிலும், இன்று

2011 ஜனவரி 12]

பெரும்பாலான தனியார்கள் மின் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்கள். எங்கள் பகுதிகளிலே அதிக அளவில் காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது ஆனால், காற்று அதிகமாக வீசுகின்ற நேரத்திலே உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை உள் வாங்குவதற்கான துணை மின் நிலையங்கள் இல்லை. ஏனென்று சொன்னால், திடீரென்று 10 நாள் காற்று பலமாக வீசுகின்றபோது, மின்சாரம் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை உள் வாங்குவதற்கான துணை மின் நிலையங்கள் இல்லாத காரணத்தினால் மின் துறை அதிகாரிகள் 'காற்றாலைகளை ஓட்ட வேண்டாம்; நிறுத்தி விடுங்கள்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு சில நேரங்களிலே நிலைமை இருக்கிறது. இதுசம்பந்தமாக காற்றாலை அதிபர்களிடம் பேசுகின்றபோது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் 'நாங்களே துணை மின் நிலையங்கள் அமைத்துக்கொள்கிறோம்; நாங்கள் உற்பத்தி செய்கிற மின்சாரத்தை நாங்களே வெளியே விற்றுக் கொள்கிறோம்; அதற்கான அனுமதியை தமிழக அரசு கொடுத்தால், அந்தத் துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற செலவுகளை நாங்களே ஏற்றுக்கொள்வோம்; ஆனால் மின்சார வாரியம், அவர்களும் கொள்முதல் செய்வதில்லை, எங்களை வெளியே விற்பதற்கும் அனுமதிப்பது இல்லை. ஆகவே, இதைப்போன்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் Non-Conventional Energy, மரபுசாரா மின்சார சக்தியை உற்பத்தி செய்வது தமிழகத்திலே குறைந்து வருகிறது' என்று சொல்கிறார்களே அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலை தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. சில இடங்களிலே அதிகமாக காற்று வீசுகின்ற நேரங்களிலே காற்றாலை உரிமையாளர்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றபோது, போதுமான Sub-Station இல்லாத காரணத்தினாலே, உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை அவர்களால் வாரியத்திற்குக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, நாங்களே Sub-Station அமைத்துக்கொள்கிறோம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

ALONE TRIUMPHS

[2011 ஜனவரி 12

நாங்கள் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். ஆனால், அதிலே ஒரேயொரு பிரச்சினை. அவர்கள் வெளியிலே விற்க வேண்டுமென்று கேட்கிறார்கள். இப்பொழுது மின்சாரப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு வரையிலே அந்த அனுமதியைக் கொடுக்க முடியாது. 2012–க்குப் பிறகு நமக்கு உபரி மின்சாரம் கிடைக்கும். அந்த நேரத்திலே அவர்கள் மின்சாரத்தை வெளியிலே விற்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைப்பதும், மின் உற்பத்தியைப் பெருக்குவதும், நம்முடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக. நான்கூட கடந்த முறை சட்டமன்றத்திலே பேசியபோது, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல பதிலைச் சொன்னார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கிற விவசாயிகளினுடைய பிரச்சினை என்ற காரணத்தினாலேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் கொண்டு வந்து இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளினுடைய மின் தேவைக்காக விவசாய மின் இரைப்பானுக்கு, பம்பு செட்டுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று அவர்கள் கேட்ட நேரத்தில் இரண்டு இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள். அது தமிழ்நாடு முழுவதும் விவசாயிகளின் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பை ஏற்படுத்தியது. ஆனால், நபார்டு வங்கியினுடைய நிபந்தனை என்று சொல்லப்பட்டு, தற்போது நூற்றுக்கு இருபது, இருபத்தைந்து விழுக்காடு மட்டுமே மின் இணைப்பு பெறக்கூடிய நிலை என்பது விவசாயிகள் மத்தியிலே ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், ஒரு விவசாயிக்கு ஒரு சர்வே எண்ணில் ஒரு மின் இணைப்பு இருந்தால், இன்னொரு மின் இணைப்பு புதிதாக வழங்கப்பட மாட்டாது என்று சொல்லப்படுகிறது. உதாரணத்திற்கு, அப்பன் பெயரிலே நிலம் இருக்கிறது, 20 ஏக்கர், 15 ஏக்கர், 25 ஏக்கர் என்றால், விவசாயிகள் அண்ணன், தம்பிகள் 4 பேர், 5 பேர் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2011 ஜனவரி 12]

ஒரே சர்வே எண் நிலத்தில் 4, 5 பேர் பயிரிடுகிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு மறுக்கப்படுகிறது. பட்டா மாறுதல் இல்லை. இது ஒன்று. அடுத்தது, ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடைவெளி 150 மீட்டர் என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஒரு போர் வெல்லுக்கும் இன்னொரு போர் வெல்லுக்கும் இடைவெளி 350 மீட்டர் என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல, ஒரு போர் வெல் இருந்து, இன்னொரு போர் வெல்லும், கிணறும் இருந்தால் 600 மீட்டர், அரை கிலோ மீட்டருக்கு மேலே இடைவெளி இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இப்படி நிபந்தனைகளை விதித்தால் விவசாயிகள் பயன்பெற முடியாது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது மிக முக்கியமானப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள். நேற்று கேள்வி நேரத்தை அரை மணி நேரம் அதிகமாக எடுத்ததால் விவாதத்தில் உறுப்பினர்கள் பேச முடியாமல் போய்விட்டது.

திரு. ஜி.கே. மணி: ஒரு மின்சார வாரிய துணை அலுவலகத்தில், தகுதியுடைய 200 பேர்களின் விண்ணப்பங்கள் தயாராக இருக்கின்றன. அவர்களில் வருவாய் துறையிலே சான்று பெற்றோர் 85 பேர். ஆனால் அவர்களில் இணைப்பு பெற தகுதியானவர்கள் 36 பேர். அப்படி 200-க்கு 36 பேர்தான் தகுதி என்று சொன்னால், இந்நிலையை ஏற்க முடியாது. ஆகையினாலே, தயவுசெய்து நபார்டு வங்கியின் நிபந்தனைகளை தளர்த்தவேண்டுமென்பது என்னுடைய முதல் வேண்டுகோள். இரண்டாவது, ஸ்டார் மோட்டார் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள், அதைத் தளர்த்தி, எங்கு வேண்டுமானாலும், எது வேண்டுமானாலும், பழைய மோட்டார், புது மோட்டார் வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கட்டும். அதுமட்டுமல்ல, காலக்கெடு விதித்தீர்கள். அந்தக் காலக்கெடு முடிந்துவிட்டது. காலக்கெடுவை இன்னும் இரண்டு மாதக் காலத்திற்கு நீட்டித்துக்கொடுத்து, விவசாயிகள் வயிற்றில் பால்வார்க்கவேண்டும். தமிழ்நாடு முழுவதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு நல்ல தீர்வினை அறிவிப்பார்களா என்பதை ஆவலோடு எதிர்பார்த்துக் கேட்கிறேன்.

[2011 ஜனவரி 12

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டு, நானும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், இதுகுறித்து அதிகாரிகளோடு கலந்து பேசி, ஆவன செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலே, இரண்டு இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு, முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட அந்த இணைப்புகளுக்கு, இந்த ஆண்டு எப்படியும் மின்சார இணைப்புகள் கொடுத்துவிடுவோம்.

இரண்டாவது, ஸ்டார் மோட்டார்களைப் பற்றிச் சொன்னார்கள். ஸ்டார் மோட்டார்கள் வாங்கவேண்டுமென்று முடிவு எடுத்ததற்குக் காரணமே, சுதந்திர தின விழாவில் கொடியேற்றிவிட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், மின்சாரத்தினை 20 முதல் 30 சதவிகிதம் சிக்கனப்படுத்துவதற்கு, மோட்டார்கள் புதுப்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே, 4 ஸ்டார், 5 ஸ்டார் மோட்டார்களைப் போட்டால்தான், 20 சதவிகிதம், 30 சதவிகிதம் efficiency கிடைக்கிறது என்று மின் வாரியப் பொறியாளர்கள் அரசுக்குக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் அந்த மோட்டார்கள் வாங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர், திரு. பெ. காமராஜ், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

23—

பச்சைக்கல் படிமங்கள்

***5622—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—